முருகப்பெருமான் துணை

# மகான் பூதத்தாழ்வார் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

10.06.2021, வியாழக்கிழமை

1. வரமாக வடிவேலன் சக்தியாக
வந்தநல் ஆறுமுக அரங்கனே
தரணியிலே உன் பெருமை கூறி
தக்க பிலவ விடை திங்கள்
2. திங்களிலே இருபானேழ்திகதி குருவாரம்
(பிலவ வருடம் வைகாசி மாதம் 27ம் நாள், 10.06.2021 வியாழக்கிழமை)
தேசிகனுக்கு யோகபிரசன்ன ஆசி
இங்கனமே பூதத்தாழ்வார் யானும்
இயம்பிடுவேன் உலக நலம் பெற
3. நலம்தரும் ஞான சக்தியாக
ஞானிகள் மேலான வழிபாடு
பலமாக உலகினில் பெருகிவர
பாவகரும செயல்கள் இனி விலகி நிற்கும்
4. நிற்கவே ஞானிகள் நாமசெபம்
நிலமதனில் மக்களிடை நிரம்ப
அற்புதமாக ஞானிகள் வெளிப்பாடு
அகிலம் எங்கிலும் நடந்துமே
5. நடந்துமே வழிகாட்டல் மிகுதியாகி
நல்லோர்கள் பலம் கூடும்
இடரான மாந்தர்களின் குணமும்
இறைவழியாக மாற்றம் கண்டு
6. கண்டு நல்ல தேற்றமும்
கருணை வழி நோக்கம் ஆகி
உண்டாகும் உலக மாற்றம்
உண்மை ஞான வழியில் காணும்
7. காணவே மாற்றத்தை தூண்டி
கந்த வேலன் சூட்சுமமாக
ஞானதேசிகன் சேவை புரிந்திட
நம்பிக்கை வைத்து வரும் மக்கள்
8. மக்களுக்கு மரணம் விலகும்
மறுமை போக்கி வாழும்
ஆக்கமும் உயர் பக்குவமுடன்
அழியாமை ஞானமும் உறுதியாகும்
9. ஆகவே இந்தவித தன்மை
அகிலத்தார் அரங்கன் வழிஅடைய
யுகமே ஞானவான்கள் நிறைந்த
உயர் பூமியாக மாற்றம் கண்டு

10. கண்டுமே பாதுகாப்பு கூடும்
கலியின் துன்பங்கள் ஓடும்
கண்டமல்லல் உயிர் பலியான
கருமாவழி மரணங்கள் விலகி

11. விலகி எங்கிலும் எதிலும்
வேலவன் சக்தியாக நிரம்பி
காலனும் அஞ்ச தேற்றமும்
கருணைநிறைந்த மாற்றமும் நிகழும்

யோகபிரசன்ன ஆசி முற்றே

–சுபம்–